**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 4 ஆம் நாள் வியாழன்கிழமை**

**I.A. 6/2026 in O.S. No.42/2022**

M. செந்தில் செல்வம் ..... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. P.நாகப்பிள்ளை
2. N.கிருஷ்ணமூர்த்தி
3. N.ராமலிங்கம்
4. ஊராட்சி மன்றத்தலைவர்,
   பாளையங்கோட்டை ஊராட்சி,
   ஆத்தூர் தாலுகா,
   திண்டுக்கல் மாவட்டம்.
5. கிராம நிர்வாக அதிகாரி,
   பாளையங்கோட்டை கிராமம்,
   ஆத்தூர் தாலுகா,
   திண்டுக்கல் மாவட்டம்.
6. வட்டாட்சியர்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   ஆத்தூர் தாலுகா,
   திண்டுக்கல் மாவட்டம்.
7. மாவட்ட ஆட்சித்தலைவர்,
   வேலுநாச்சியார் வளாகம்,
   திண்டுக்கல்,
   திண்டுக்கல் மாவட்டம். ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 16.02.2026 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.செல்வராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.I.ஜான் ராயப்பன் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/வாதி தாக்கல் செய்த வழக்கை கடந்த 06.01.2026 அன்று மனுதாரர்/வாதி ஆஜராகாத காரணத்திற்காக தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து மீண்டும் வழக்கை கோப்பிற்கு எடுக்க உத்தரவிட வேண்டி சிபிசி ஆர்டர் 9 ரூல் 9 மற்றும் பிரிவு.151–ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுவுரை சுருக்கம்</u>**

மனுதாரர் அசல் வழக்கில் எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்து சம்பந்தமாக உறுத்துக் கட்டளை மற்றும் இதர பரிகாரம் கோரி தாவா வழக்குத் தாக்கல் செய்து, அதில் மனுதாரர் தரப்பில் Trialக்காக கடந்த 06.01.2026ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், மனுதாரருக்கு உடல்நலம் சரியில்லாமல் வைரஸ் காய்ச்சல் சளி தொல்லையினால் தீவிரமாக பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையில் இருந்து மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொண்டதின் காரணமாகவும் மனுதாரரால் வாய்தா தேதியில் ஆஜராக இயலாமல் போயிற்று. மேற்படி தவறு

வேண்டுமென்றே ஏற்பட்ட ஒன்றல்ல, தெய்வாதீனமாக ஏற்பட்ட ஒன்றாகும். எனவே கடந்த 06.01.2026 அன்று மனுதாரர்/வாதி ஆஜராகாத காரணத்திற்காக தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து மீண்டும் வழக்கை கோப்பிற்கு எடுக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>1 முதல் 3 எதிர்மனுதாரர்களின் எதிர்மனுவுரை சுருக்கம்</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இடைக்கால மனுவானது "எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யவேண்டியது" ஆகும்.

மனுதாரரின் வழக்கானது கடந்த 06.01.2026-ம் தேதியன்று விசாரணைக்காக (Trail) மாண்புமிகு நீதிமன்றம் வாய்தா போடப்பட்டு இருந்தது. அன்றைய தினம் மனுதாரரின் வழக்கறிஞரும் ஆஜராகவில்லை எனக்கூறி வாதியின் அசல் வழக்கை "தவறுகையின் காரணமாக தள்ளுபடி" செய்யப்பட்டுளளது.

ஆனால் 06.01.2026-ம் தேதிக்கு முன்பாக 18.12.2025, 10.12.2025, 25.11.2025, 27.10.2025, 25.09.2025, 09.09.2025, 28.07.2025, 25.06.2025 என மொத்தம் 9 வாய்தாக்கள், மனுதாரருக்கு கால அவகாசம் கொடுத்தும் மனுதாரர் தன் தரப்பு விசாரணைக்கு ஆஜராகவும், எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருவது 1 முதல் 3 வரையிலான எதிர் மனுதாரர்களுக்கு பெருத்த மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

மனுதாரர்க்கு உண்மையிலேயே அவர் தொடுத்த அசல் வழக்கில் உண்மைத் தன்மை இருக்குமேயானால் வாதியின் வழக்கை நடத்துவதற்கு தயாராக இருந்திருப்பார். ஆனால் மனுதாரர் அவ்வாறு வழக்கை நடத்த தயாராக இல்லாமல் 1

முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு "தீங்கு விளைவிக்க வேண்டும், காலம் கடத்த வேண்டும்" என்ற கெட்ட எண்ணத்திலேயே மனுதாரர் இடைக்கால மனுவை தாக்கல் செய்துள்ளார்.

எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இடைக்கால மனுவை வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வேண்டப்படுகிறது. தவறும் பட்சத்தில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்கண்ட இடைக்கால மனுவை அதிக செலவுத் தொகையுடன் அனுமதிக்க வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) <u>**தீர்வு**</u>

மனு மற்றும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததில், மனுதாரர்/வாதியால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் கடந்த 06.01.2026 அன்று, மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் வைரஸ் காய்ச்சல் சளி தொல்லையினால் தீவிரமாக பாதிக்கப்பட்டிருந்த காரணத்தினால் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகததாலும், மனுதாரர்/வாதிக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், அதனை ரத்து செய்து வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரர்/வாதி தரப்பு விசாரணைக்காக இவ்வழக்கின் வாதிக்கு தொடர்ந்து வாய்ப்பளித்தபோதும், விசாரணைக்கு வருகை தராததால் இந்த வழக்கு 06.01.2026 அன்று வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி

செய்யப்பட்டுள்ளது. வழக்கு வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட தேதியான 06.01.2026 தேதி ஆஜர் ஆகாததற்கு காரணம் உடல்நிலை சரியில்லாமல் வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தது என்று கூறியுள்ள காரணம் இம்மனுவை அனுமதிக்க போதுமான காரணம் தான் என்றாலும், இவ்வழக்கை வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்துள்ளதால், எதிர்மனுதாரர்களை அலைக்களிக்கும் விதத்தில் வழக்கை நடத்தாமல் வாதியின் செயல் உள்ளதால், இம்மனுவை அனுமதிக்க மனுதாரர், 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக ரூ.1000/-ஐ வருகிற 11.06.2026-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

ii) **முடிவாக**, இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜீன் மாதம் 04 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.04 15:54:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் ஆத்தூர்.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை**

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.04 15:54:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நடுவர் ஆத்தூர்.